# <u>In the Court of the Principal District Munsif, Padmanabhapuram.</u>

E.A.No.03/2022 in E.P.14/2012 in
O.S.26/2004 தேதி-06.03.2025

(P.W.1) - ராஜமணி

<u>குறுக்கு விசாரணை</u>

ஆணையர் அறிக்கையில் 08.07.2010 அன்று வாதிக்கு உரிமைப்பட்ட சொத்தை என்னிடமிருந்து மீட்டு பெறப்பட்டதாக குறிப்பிடபட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்சொன்ன ஆணையர் அறிக்கைக்கு எந்த ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை என்றால் அது பற்றி தெரியாது என் வழக்கறிஞரும் அது பற்றி எந்த தகவலும் அது பற்றி சொல்லவில்லை. ம.சா.ஆ.2 ஆவணமான புகைப்படம் வழக்கு பட்டிகை சொத்து அல்ல என்றால் சரியல்ல. ம.சா.ஆ.2 ஆவணமான புகைப்படங்கள் 2010-இல் எடுத்தது அல்ல என்றாலும் அனைத்து புகைப்படமும் புதியதாக உள்ளது என்றால் சரியல்ல. ம.சா.ஆ.3-இல் 08.07.2010 அன்று வழக்கு பட்டிகை சொத்து வாதியின் கைவசத்தில் உள்ளதாக குறிப்பிடபட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நிறைவேற்று மனுவானது பாக்கி வாடகை தொகை மீன்ஸ் பிரபிட் கடந்த காலம் மற்றும் எதிர்கால வாடகை தொகைக்கான மனு என்றால் எனக்கு நினைவு இல்லை. மேற்சொன்ன சங்கதிகள் எனக்கு தெரியும் என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மனுதாரருக்கு நிறைவேற்றுதல் மனுவில் பாக்கி வாடகை தொகை மீன்ஸ் பிரபிட் தொகை கிடைக்க தகுதியுடையவர் என்று உச்சநீதிமன்றம் வரை வழக்கு நடத்தப்பட்டு முடிவு செய்யப்பட்டு விட்டது என்றால் சரியல்ல.